# THE EDUCATION PROBLEMS FACED BY CHILDREN: BASED ON THE 'SAVUKKADI' VILLAGE – A SOCIOLOGICAL STUDY

**Paheerathy Moses**
Department of Social Sciences, Eastern University of Sri Lanka, Sri Lanka.
*rathyms@yahoo.com*

**ABSTRACT:** The Enriches human reason and good sense to do is to educate. This is the first of the basic needs of man. So since childhood education is necessary to learn in terms of consistency.But do not take place in all communities. And where are grateful to the many reasons.They are different in kind. The context of such a flogging educational problems faced by children in the 'Savukkadi' village, EravurPattu Divisional Secretariat Division.  Making regarding what is proper.Primary and secondary data used to this research.For that discussion, interview, questionnaire used, are linked to the researcher's observation signify.The study includes information relating to books, journals, magazines, the Internet and issues, like the reports received from industry members.Based on the research results obtained in the study area was found to be the main cause of the recession, lack of educational development. Therefore, dependent on the development of children's education in the future development of society has emerged.Therefore, universal education to children, to receive education in the best directory, and to participate in a series of educational activities in their home environment, society must be made.And other resources necessary to obtain the education necessary Formulating appropriate way.Thereby reaching their future fertility.Developing area.It is necessary to offer the cooperation of all communities.

**Keywords:** Children, Education, Problem, Development, Recession

**அறிமுகம்:**

மானிட பகுத்தறிவையும் நல்லறிவையும் சிறப்புறச் செய்வது கல்வி ஆகும். அதனால் மனிதனின் அடிப்படைத் தேவைகளில் இது முதன்மையானதாக கொள்ளப்படுகிறது. எனவே சிறுவயது முதலே கல்வியை சீரான வகையில் கற்க வேண்டியது அவசியமானதாகும். ஆனால் சகல சமூகங்களிலும் அவ்வாறு இடம்பெறுவதில்லை. அதற்கு பல காரணங்கள் ஏதுவாய் அமைந்து விடுகின்றன. அவை வெவ்வேறு வகைப்பட்டதாக காணப்படும். இவ்வாறானதொரு பின்னணியில் மட்டக்களப்பு,ஏறாவூர் பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சவுக்கடி கிராமத்தில் சிறுவர்கள் எதிர்நோக்கும் கல்விசார் பிரச்சினைகள் எவை என்பது தொடர்பாக ஆராய்ந்து முடிவுகளை முன்வைப்பதாக இவ்வாய்வு அமைகிறது.

**முறையியல்:**

இவ்வாய்வுக்காக முதலாம் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதலாம் நிலைத்தரவுகள் ஆய்வுப் பிரதேசத்தைச் சேர்ந்த மாணவர்கள், பெற்றோர்கள், பிரதேச மக்கள், அப்பிரதேசத்தில் பணியாற்றும் பாடசாலை சமூகத்தினர் மற்றும் கல்வித் துறையோடு தொடர்புபட்ட உத்தியோகத்தர்கள், கிராம சேவகர் உட்பட அக்கிராமத்தில் பணியாற்றும் பல்துறை சார்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றோரிடமிருந்தும் பெறப்பட்டன. அதற்காக கலந்துரையாடல், நேர்காணல், வினாக்கொத்து என்பவை பயன்படுத்தப்பட்டதோடு ஆய்வாளரின் அவதானிப்பும் முக்கியத்துவப் படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய ஆய்வுப் பிரதேசத்திலிருந்து மாணவர்களும் பெற்றோர்களும் மாதிரி முறை மூலம் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

இரண்டாம் நிலைத்தரவுகள் ஆய்வுடன் தொடர்புபட்ட தகவல்களை உள்ளடக்கிய நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையம் மற்றும் துறைசார் நிறுவனங்களின் அறிக்கைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன.

மாதிரிமுறை (மாணவர்கள்)

| வயது | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 3 – 5 | 05 | 06 | 11 |
| 6 – 10 | 20 | 20 | 40 |
| 11 – 15 | 10 | 08 | 18 |
| 16 – 18 | 15 | 16 | 31 |
| மொத்தம் | 50 | 50 | 100 |

மேற்குறிப்பிட்ட வயதடிப்படையில் உள்ள மாணவர்களின் பெற்றோர்கள் 70 பேர் மாதிரிகளாகத் தெரிவுசெய்யப்பட்டு ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

**கலந்துரையாடலும்பெறுபேறுகளும்:**

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சவுக்கடி கிராமத்திலுள்ள 100 மாணவர்களும் 70 பெற்றோர்களும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டதன் வகையிலும் ஏனையவர்கள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டதன் அடிப்படையிலும் குறித்த பிரதேச சிறுவர்கள் கல்வியைப் பெற்றுக்கொள்வதில் எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகள் இனங்காணப்பட்டன. அவை,

- சிறுவர்களின் கல்வியில் குடும்பத்தின் பங்களிப்பு போதியளவு கிடைக்காமை
- குறித்த கிராமத்தில்தரம் ஐந்திற்கு மேற்பட்ட பாடசாலை இல்லாமை
- போதிய போக்குவரத்து வசதியின்மை,
- போதிய சுகாதார வசதிகளின்மை
- கல்விசார் வளப்பற்றாக்குறை,
- பாதுகாப்பின்மை

**சிறுவர்களின் கல்வியில் குடும்பத்தின் பங்களிப்பு போதியளவு கிடைக்காமை:**

இப்பிரச்சினை மிகவும் முக்கியமானதாக காணப்படுகிறது. சிறுவர்களின் கல்வியில் குடும்பத்தின் பங்களிப்பு போதியளவு கிடைக்காமைக்கு பல காரணங்கள் ஏதுவாக காணப்படுகின்ற போதிலும் குடும்பத்தாரின் குறைந்த கல்வி மட்டம், வருமானம் போதாமை, வறுமை, பெற்றோர் வெளிநாடு செல்லல், பெண்தலைமைக் குடும்பங்களின் அதிகரிப்பு, நிரந்தர தொழிலின்மை, விவாகரத்து, போதைப்பொருள் பாவனை போன்றவை பிரதான காரணங்களாக காணப்படுகின்றன. அதன் பிரதிபலிப்பாக பாடசாலை இடைவிலகல்,சிறுவர் தொழிலுக்குச் செல்லுதல், இளவயதுத் திருமணங்கள்,துஸ்பிரயோகம் போன்றவை அதிகரித்துச் செல்வதனை அவதானிக்க முடிகிறது.

**குறித்த கிராமத்தில் தரம் ஐந்திற்கு மேற்பட்ட பாடசாலைஇல்லாமை:**

தரம் ஐந்து வரை கற்கக் கூடிய ஒரேயொரு பாடசாலை மட்டுமே ஆய்வுப் பிரதேசத்தில்உள்ளது. அப்பாடசாலையைத் தவிர வேறெந்தவொரு பாடசாலையும் அப்பிரதேசத்தில் இல்லை. அதன்காரணமாக தரம் ஆறு தொடக்கம் கற்பதானால் குறித்த பிரதேச மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்கு செல்ல வேண்டும். அவை தூர பிரதேசங்களிலேயே உள்ளன. அதனால் தரம் ஐந்துடன் பாடசாலை செல்வதனை இடைநிறுத்தி விடுகின்றனர். இப்பிரச்சினை தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

**போதிய போக்குவரத்து வசதியின்மை:**

இப்பிரதேசத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே போக்குவரத்து வசதிகள் காணப்படுகின்றன. அதன்காரணமாக தூர இடங்களுக்குச் சென்று கற்பதற்கான சூழல் காணப்படவில்லை. வாகனம் பயணிக்கக் கூடிய பாதை வசதிகளும் குறைவாகவே காணப்படுகின்றன. தமது அவசிய பயணங்களை மிக அதிகமானோர் கால்நடை மூலமாகவே நிறைவேற்றுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பிட்ட சிலரிடம் மட்டுமே துவிச்சக்கரவண்டிகள் பாவனையில் உள்ளன.

**போதிய சுகாதார வசதிகளின்மை:**

போதிய சுகாதார வசதியின்மையினால் சிறுவர்கள் அடிக்கடி நோய்வாய்ப்படுகின்ற நிலை காணப்படுகின்றது. சிகிச்சை முறைகள் ஒழுங்காகப் பின்பற்றப்படாதவிடத்து அந்நோய் நாளடைவில் பிள்ளைகளின் உடல் நலனில் மேலும் தாக்கத்தினை உண்டுபண்ணுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தில் பிள்ளைகளது நோய் நிலைமைக்குக் குடும்பத்தினுடைய செயற்பாடுகளினால் ஏற்படுகின்ற நெருக்கீடுகளும் காரணமாகியமை புலனாகியது. இவ்வாறான நிலையிலுள்ள பிள்ளைகள் தமது கல்வியை தொடர்வதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

**கல்விசார் வளப்பற்றாக்குறை**

குறித்த பிரதேசத்தில் கற்றலுக்கான அடிப்படைத் தேவைகள் போதியதாக இல்லை. கற்றலுக்கான தனியிட வசதிகள், மின்சார வசதிகள் இல்லங்களில் இல்லை. பாடசாலையில் பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் போதாமை,தளபாடங்கள் மற்றும் வகுப்பறை வசதிகள் போதியளவின்மை, தனியார் கல்வி நிலையங்கள் மற்றும் கற்றல் வசதிகள் இல்லாமை போன்ற கல்விசார் வளப்பற்றாக்குறை நிலவுகின்றது. இந்நிலை சிறுவர்களின் கல்வியில் பல பிரச்சினைகளை ஏற்படுத்தி வருகின்றன.

**பாதுகாப்பின்மை:**

இக்கிராமம் பற்றைக்காடுகள் நிறைந்ததாகவும், நெருக்கமான குடியிருப்புகள் அற்றதாகவும் காணப்படுவதனால் அப்பாதைகளில் பயணிப்பதில் பாதுகாப்பின்மை காணப்படுகிறது. மாணவிகள், ஆசிரியைகள் பயணிக்கையில் துஸ்பிரயோகம் செய்யப்படும் நிலை அண்மைக்காலம் வரை தொடர்கிறது.

தமது பிள்ளைகளை அழைத்துச் செல்லும் இளம் தாய்மார் துஸ்பிரயோகம் செய்யப்படுவதும், தங்க நகைகளை பறி கொடுப்பதும் நீடித்துச் செல்கிறது.

சிறிய மாணவர்கள் தெருக்களில் நடந்து செல்லும் போது இனந்தெரியாத நபர்கள், பாம்பு, தெரு நாய்கள் மற்றும் கொடிய பிராணிகளால் தாக்கப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன.

இவை போன்ற காரணங்களால் ஏற்படும் பாதுகாப்பின்மையினால் இப்பிரதேச சிறுவர்கள் கல்வியைத் தொடர்வதில் பிரச்சினைகள் எழுகின்றன.

இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து பிள்ளைகளையும் தாய்மாரையும் பாதுகாப்பதற்கு தந்தைமார் கவனம் செலுத்துவது மிகக்குறைவாகவே காணப்படுகிறது. பிள்ளைகள் மீதான தந்தைமாரின் பராமரிப்பும் மிகக்குறைவாகவே காணப்படுகிறது.

இவை தவிர இயற்கையுடன் இயைந்த மேலும் பல பிரச்சினைகள் காணப்படுகின்றன.

மேற்கூறப்பட்ட பிரச்சினைகளால் சிறுவர்கள் உடல் மற்றும் உளரீதியாகத் தாக்கமடைகின்றனர். அதன்காரணமாக அவர்களது கல்வி பாதிப்படைகிறது. எனவே இப்பிரச்சினைகளுக்கு அவை சார்ந்த நபர்களும் நிறுவனங்களும் முறையான செயற்படுத்தல்களை மேற்கொள்ளுமிடத்து குறித்த பிரதேச சிறுவர்களின் கல்வியில் முன்னேற்றத்தை கொண்டுவரலாம். அதனூடாக குறித்த சமூகம் மேம்படுத்தப்படும். அவர்களின் எதிர்கால வாழ்க்கை வளமுள்ளதாக மாற்றமடையும்.

இன்றைய சிறுவர் விருத்திக்கான செயற்பாடுகளே எதிர்கால சமூகத்தின் மேம்பாடாகும். அதனால் சிறுவர் சமூகம், அவர்களின் நல்வாழ்வு, சிறுவர்களின் அபிலாசைகளை முதன்மைப்படுத்தல், அவர்களுக்கு உகந்த சூழலைக் கட்டியெழுப்புதல் முதலான சிந்தனைகள் சர்வதேசரீதியில் முன்வைக்கப்படுகிறது. ஏனெனில் உலகளாவிய ரீதியில் சிறுவர்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். அதனால் அவர்களுக்கென்று புதிய சட்டங்கள், உரிமைகள் மற்றும் உரித்துடைமைகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இருந்த போதிலும் இவ்விடயங்கள் எமது ஆய்வுப் பிரதேசம் போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்களை சென்றடயவில்லை என்பது வெளிப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் உறுப்புரை ஒன்றின் பிரகாரம் ''பதினெட்டு வயதிற்கு குறைந்த மனிதப் பிறவிகள் ஒவ்வொருவரும் சிறுவர்கள்''என வரையறுக்கப்பட்டுள்ளது. இவர்களைப் பாதுகாக்க உருவாக்கப்பட்ட பல சட்ட ஏற்பாடுகளில் ஐக்கிய நாடுகள் சமவாயத்தினுடைய உறுப்புரைகள் முக்கியமானதாக அமைகின்றன.

சிறுவர்களின் நிலைமை பற்றிய சர்வதேச கவனம் முதன் முதலாக 1923ஆம் ஆண்டிலிருந்து கருத்துருபெற்றது. அதன் விளைவாக சிறுவர்களின் உரிமைகள் தொடர்பாக 'சிறுவர் பாதுகாப்புக்கான சர்வதேச சங்கம்' என்ற அமைப்பு ஐந்து அம்சப் பிரகடனம் ஒன்றினை ஏற்றுக்கொண்டது. 1948இல் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச்சபை மேற்படி பிரகடனத்தை மேலும் விரிவுபடுத்தியது.

இதன் பின்னர்தான் 1979ஆம் ஆண்டு உலக சிறுவர் ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டது. அதைத் தொடர்ந்து ஐ.நா சிறுவர் உரிமை சமவாயம் 1989ஆம் ஆண்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனைப்

பின்பற்றியதாக இலங்கை உட்பட பல நாடுகளும் பல்வேறு சட்டங்களை ஆக்கி வருகின்றன. அவை சிறுவர்களின் உயரிய நலனை முதன்மைப்படுத்திய சிறுவர் பாதுகாப்புச் சட்டங்களாக காணப்படுகின்றன.

சமுதாயத்தில் சமத்துவமாக நடாத்தப்படும் வகையில் சிறுவர்களுக்கென உள்ள சிறப்புரிமைகள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான சில சட்டவாக்க ஏற்பாடுகள் உலகளாவிய மற்றும் உள்நாட்டு மட்டத்தில் அவசியமாக உள்ளது. 1992ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைச் சமவாயத்துக்கு ஏற்புடையதான ஓர் சிறுவர் உரிமைச்சாசனத்தினை இலங்கை அரசு வெளியிட்டது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சமவாயத்தின் பிரகாரம் சிறுவர்களின் அடிப்படை உரிமைகள் மிக ஆழமான முறையில் வலியுறுத்தப்பட்டுள்ளன. உயிர் வாழ்வதற்கான உரிமை, கல்வி கற்பதற்கான உரிமை, பங்குபற்றல் சார்பான உரிமை, கருத்து வெளிப்பாடு, சிந்தனைச் சுதந்திரம் தொடர்பான உரிமை, ஆரோக்கியமாக வாழும் உரிமை, விளையாட்டு ஓய்வு என்பவற்றுக்கான உரிமை முதலியவற்றை இச்சமவாயம் குறிப்பிட்டுள்ளது. இதனை அடிப்படையாகவும், மூலாதாரமாகவும் கொண்டே 1959ஆம் ஆண்டில் சிறுவர் உரிமை பிரகடனப்படுத்தப்பட்டது.

இவ்வாறான உரிமைகளில் சிறுவர்கள் கல்வி பெறுவதற்கான உரிமை பற்றி சரத்து 28 மற்றும் 29 என்பவற்றில் கூறப்பட்டுள்ளது. ஐந்து உறுப்புரைகள் கல்வி சார்ந்த இலக்குகளைக் குறிப்பிடுகின்றன. சிறுவர் உரிமைகள் சமவாயத்தின் சரத்து 32இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 'தம் ஆரோக்கியம், கல்வி வளர்ச்சி என்பவற்றின் மேம்பாட்டிற்கு அச்சுறுத்தலாய் அமையக் கூடிய வேலைகளிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை பிள்ளைகளுக்கு உண்டு' என்பது இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும். 1997ஆம் ஆண்டில் முதலாம் இலக்க சட்டத்தின் பிரகாரம் ஐந்து வயதிலிருந்து தமது பிள்ளையை ஒரு பாடசாலைக்கு கிரமமாக சென்று கல்வி கற்பதற்கு ஒழுங்குகள் செய்தல் பெற்றோரின் கடமையாகும்.

இதனடிப்படையிலே ஐக்கிய நாடுகள் சமவாயத்தின் உறுப்புரை 28 கல்வி தொடர்பான அடிப்படை உரிமை பற்றி வலியுறுத்துவதுடன், பின்வருவனவற்றின் அவசியத்தையும் சுட்டிக்காட்டுகின்றது.

- அனைவருக்கும் ஆரம்பக்கல்வி இலவசமாகவும், கட்டாயமாகவும் கிடைக்க வேண்டும்.
- வெவ்வேறு வகையான இடைநிலைக் கல்வியை ஊக்குவித்து வளர்க்க வேண்டும்.
- எல்லாப் பிள்ளைகளுக்கும் கல்வி மற்றும் தொழில்சார் தகவல்கள் கிடைக்க வேண்டும்.
- பிள்ளைகள் பாடசாலைக்குக் கிரமமாகச் செல்வதை ஊக்குவிக்கவும், படிப்பை இடையில் நிறுத்துவதைக் குறைக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

உறுப்புரை 29 கீழ்வரும் தேவைகளை விவரிக்கின்றது.

- பிள்ளைகளின் ஆளுமை, திறமைகள், உடல், உள ஆற்றல்கள் முழுமையாகப் பரிணமிக்கச் செய்தல்.
- சுதந்திர சமூகத்திலே பொறுப்புணர்ச்சியுடன் வாழ்வதற்குப் பிள்ளையைத் தயார் செய்தல்.
- தம் பெற்றோர், கலாசாரத் தனித்துவம், மொழி, ஆசாரங்கள் ஆகியவற்றுடன் மற்றவர்களின் பண்பாடு, ஆசாரங்கள் ஆகியவற்றினையும் மதிக்கும் பண்பை பிள்ளைகளிடையே வளர்த்தல்.

ஒரு நாட்டின் சமூக, பொருளாதார, அரசியல் வளர்ச்சியானது அந்நாட்டின் கல்வி வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. இத்தகைய கல்வியினைப் பெற்றுக் கொள்வதில் சிறுவர்கள் பல சவால்களை எதிர்நோக்குகின்றனர்.

யுனிசெப்(UNICEF) மதிப்பீட்டின் படி உலகில் மூன்று கோடி சிறுவர்கள் சாலையோரங்களில் வசிக்கின்றனர். ஐந்து கோடி சிறுவர்கள் பாதுகாப்பற்ற சுகாதார நிலைமைகளில் வேலை செய்கின்றார்கள். சுமார் 70 இலட்சம் பேர் அகதிகளாக்கப்பட்டுள்ளனர். சுமார் 10 கோடி சிறுவர்களுக்கு ஆரம்ப கல்வி கூட கிடைப்பதில்லை. 15 கோடிச் சிறுவர்கள் போதிய ஊட்டச் சத்து இன்றி உள்ளனர்.

யுனிசெப் அறிக்கை ஒன்றின்படி உலகில் சுமார் 20 மில்லியன் சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லாதுள்ளனர். 250 மில்லியன் சிறுவர்கள் உழைப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். இதேவேளை வறுமை, பஞ்சம்,நோய், தூய்மையற்ற குடிநீர் பருகுதல் போன்ற காரணங்களில் வருடாந்தம் பல்லாயிரக் கணக்கான சிறுவர்கள் மரணத்தை தழுவுகின்றனர் என அறிய முடிகிறது.

இலங்கை நாட்டில் உள்ள 18,639,000 மக்கள் தொகையில் 6,163,000 பேர் சிறுவர்கள் என கணிக்கப்பட்டுள்ளது. இவர்களில் 15.3% மானவர்கள் பாடசாலைக் கல்வியை கைவிட்டு தங்கள் குடும்ப வறுமையை நீக்க பொருளாதார நடவடிக்கைகளிலும், வீட்டு வேலைகளிலும் ஈடுபட்டு அவர்களது எதிர்காலத்தினை தொலைத்துள்ளமையை அவ்வறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

எமது ஆய்வுப்பிரதேசம் அமைந்துள்ள கிழக்கு மாகாணமானது கல்வியில் 2014ஆம் ஆண்டினை விட 2015ஆம் ஆண்டில் முன்னேற்றம் பெற்றிருந்தாலும் கூட தேசிய ரீதியல் ஐந்தாம் இடத்திலிருந்து எட்டாமிடத்திற்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மாவட்டத்தின் சிறுவர் கல்வியைப் பொறுத்தவரையில், நகரப் புறங்களை விட கிராமப்புறங்கள் பின்தங்கியநிலையில் உள்ளன.

ஆய்வுப்பிரதேசமான சவுக்கடிக்கிராமமும் கல்வியில் மிகவும் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு பல காரணங்கள் அடிப்படையாக அமைந்துள்ளன. எனவே இவற்றிற்கான தீர்வினை அச்சிறுவர்களுக்கு பெற்றுக்கொடுத்து சிறந்ததொரு சூழலை ஏற்படுத்துவதன்மூலம் சிறுவர் சமூகத்தை மேம்படுத்தி எதிர்கால வாழ்வை வளப்படுத்தமுடியும் என்பதில் சந்தேகம் இல்லை.

**முடிவுரை:**

சமூகத்தின் அபிவிருத்தி சிறுவர்களின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. அதனால் அறிவு, திறன், மனப்பாங்கு வளர்ச்சியினை சிறுவர்களிடத்தில் ஏற்படுத்துவது அவசியமாகும். ஆய்வுப் பிரதேசத்தின் பின்னடைவுக்கு கல்வி அபிவிருத்தி போதாமையே முக்கிய காரணமாகும் எனவே சிறுவர்கள் கல்வியைப் பெற்றுக் கொள்வதிலும், கல்வியில் சிறந்த அடைவினை அடைவதிலும், தொடர்ச்சியாக கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் வீட்டுச் சூழல், சமூகச்சூழல் மற்றும் கல்வியைப் பெற்றுக் கொள்ளத் தேவையான ஏனைய வளங்களையும் பொருத்தமான வகையில் ஏற்படுத்திக் கொடுத்தல் அவசியமாகும். சிறுவர்கள் கல்வி கற்க கூடிய சாதகமான குடும்பச் சூழல் அமைகின்ற போது அவர்களது எதிர்காலம் வளமடையும். பெற்றோர்களை இது தொடர்பில் விழிப்படையச் செய்வதுடன், இதற்கு சகல சமூகத்தினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டியதும் அவசியமாகும்.

## References


- Antony, Giddens. (2006), Sociology. 5th edition, UK: Polity press. pp. 344-353.
- Haralamboss, M & Heald, R.M.(2004), Sociology Themes andPerspective, London:Oxford University press. Pp. 140-152.
- Lefrancois,R. (2001), Children An Introduction to child and adolescent Development,United states of America: Thomas learning Inc. pp. 26-27.
- Laura, E. Berk. (2000), Child development 5th edition, United States of America: Thomas learning Inc. pp. 27-28.
- Laura, E. Berk. (2007), Child development 7th edition, India: darling Kindersley Pvt Ltd. p. 29.
- Laura, E. Berk. (1999), Child development 3rd edition, New Delhi, India: asoke ghosh printerce hall. pp. 24-25.
- Marger, N.M. (2005), Social Inequality Patterns & Processes, New York: MC Grew Hill. pp. 78-79.
- Rajendran, S. (2004), A study Preventing child Labor in the Plantation Sector, Colombo. pp. 10-12.
- Willia, A.Corsaro. (2011), the sociology of child hood. 3rdedition, Sage publication Inc. pp. 308-309.

- அலியார், யூ.எல். (1999), இருநூற்றாண்டுகளில் இலங்கையில் கல்வி, சம்மாந்துறை-06: பைத்துல் ஹஸக்மாஹ் வெளியீடு. பப. 38-56
- அருள்மொழி, செ. (2008), கல்வி ஆய்வு முறையியல்,மட்டக்களப்பு: எவகிறீன் அச்சகம். ப. 112.
- இராசேந்திரன்,ச. (2000), சமூகப் பிரச்சினைகள், அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு. பப. 72-76.
- குணரெத்தினம்,வே. (2005),சிறுவர் உரிமையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறுவர்களின் பிரச்சினைகளும், சீடா மீள்கட்டுமானத் திட்டம்,கிழக்குப்பல்கலைக்கழகம், இலங்கை. பப. 1-54.

**சஞ்சிகைகள்:**

- கருணாநிதி, மா. (2006), அகவிழி,கல்விச் செயற்பாடுகளில் அதிகரித்து வரும் பெற்றோரின் பங்கு, அகவிழி வெளியீடு. பப. 35-38.
- கருணாநிதி, மா. (2007), அகவிழி, விழி- 03, பார்வை- 31,“பிள்ளையின் ஆளுமையில் செல்வாக்குச் செலுத்தும் குடும்பக் காரணிகள்”, அகவிழி வெளியீடு. பப. 13-15.

- சுரேந்திர, டி.சில்வா, டீ,ஜீ. (2011), பொருளியல் நோக்கு- “சிறுவர் நலன் பேணலும் சுற்றுலாத்துறையும்”, மத்திய வங்கி வெளியீடு. பப. 16-19.


**இணையத்தளங்கள்:**


1. http://familychildcareacademy.com/basic-theories-and-principles-of-child-development/ , (05.12.2015, 4.00 p.m)
2. http://fosteringandadoption.rip.org.uk/topics/child-development/, (05.12.2015, 4.15 p.m)
3. http://gulfbend.org/poc/view_doc.php?type=doc&id=7930&cn=28, (05.12.2015, 4.25 p.m)
4. https://en.wikipedia.org/wiki/Ecological_systems_theory, (05.12.2015, 4.40 p.m)
5. https://pothikai.wordpress.com/2011/06/09/இலங்கையில்-சிறுவர்-உரிமை/, (05.12.2015, 5.00 p.m)
6. http://diplomaineducationtamil.blogspot.com/,(05.12.2015, 5.30 p.m)
7. http://tamil.news.lk/fetures/item/7068-2015-05-15-06-49-09, (06.12.2015, 9.00am)
8. http://diplomaineducationtamil.blogspot.com/, (06.12.2015, 9.20am)
9. http://www.battinews.com/2012/09/blog-post_8673.html, (06.12.2015, 9.30am)
10. http://archives.thinakaran.lk/Vaaramanjari/2013/12/01/?fn=f13120111&p=1, (06.12.2015, 9.40am)